3-3

ஸ்ரீ சங்கரபகவத்பாதர்கள் அருளிய

லலிதா பஞ்சரத்னம்

Acc. No. 4288



பப்ளிஷர்ஸ் :

கிரி ப்ரஸ், திருவல்லிக்கேணி

2224
2.

॥ श्रीः ॥

श्री शंकरभगवत्पादैर्विरचितं

ललितापञ्चरत्नम्

ஸ்ரீ:

ஸ்ரீ சங்கரபகவத்பாதர்கள் அருளிய

லலிதா பஞ்சரத்னம்

கோவிலூர் ஆதீனம்
4988
கோவிலூர்-630 307

ஸ்ரீ வே. நாராயணன், எம்.ஏ., எம்.எல்.

[illegible] த்துடன்

பதிப்பாளர் :

கிரி ப்ரஸ்

பைக்ராப்ட்ஸ் ரோடு, திருவல்லிக்கேணி, சென்னை.

பதிப்புரிமை] 1948 [விலை அணா 5

FIRST
EDITION
Sept. '48

GIRI PRESS

Printed & Published
by K. Kylasamier
at GIRI PRESS,
Triplicane ◆ Madras.

ஓம்

ஸ்ரீ குருப்யோ நம:

குரு வணக்கம்.

प्रातः प्रभृति सायान्तं सायादि प्रातरन्ततः ।
यत्करोमि गुरो नाथ तदस्तु तव पूजनम् ॥

ப்ராத: ப்ரப்ருதி ஸாயாந்தம் ஸாயாதி ப்ராதரந்தத: ।
யத்கரோமி குரோ நாத ததஸ்து தவ பூஜனம் ॥

ப்ராத: ப்ரப்ருதி = காலமே தொடங்கி ஸாயாந்தம் = மாலைவரையும் ஸாயாதிப்ராதரந்தத: = (மீண்டும்) மாலை தொடங்கி மறுநாட்காலைவரையும் யத் = எதையெல்லாம் கரோமி = செய்கின்றேனோ தத் = அது (முழுவதும்) தவ = உம்முடைய பூஜனம் = வழிபாடாக அஸ்து = அமைவதாக. குரோ = என்னை நல்வழிப்படுத்திய ஆசார்யோத்தமரே! நாத = என்னை ஆட்கொண்டருளிய பரமகாருணிகரே!

முன்னுரை

ஸ்ரீ லலிதா தேவியை நோக்கி, பவானி புஜங்க ஸ்தோத்திரத்தில், ஸ்ரீ சங்கர பகவத்பாதாசார்யர்கள், "தேவி! நீயே என்னை நல்வழிப்படுத்துகின்ற குருவாகி வந்து, சக்தியோடு விளங்கும் பரம சிவனுக்கு என்னை ஆட்படுத்தி, அந்த பரமனும் சக்தியுமாய் விளங்கி, என்னைப் பெற்ற தாயும் பிறப்பித்த தந்தையுமாகி, நான் கற்றுத் தேர்வதற்குரிய பிரும்ம வித்தையுமாகி, என்னை விடாது பற்றிக்கொண்டு நற்கதிக்கு உய்க்குஞ் சுற்றமுமாகி, சென்றடைவதற்குரிய அந்த உயர்கதியுமாகி, எனக்கு எல்லாமாய் விளங்குகின்றாய்" என்று கூறி, அத்தகைய லலிதா தேவியைத் தாம் தினந்தோறும் வாயாற்பாடி மனத்தினுற் சிந்தித்து, அவளையே குருவாகப் பெற்று, பிரும்மவித்யையாகவும் சக்தியோடு விளங்குஞ் சிவபிரானாகவும் அவளையே கண்டு, சகல சௌபாக்யங்களையும் பேரின்பத்தையும் பெற்று, எல்லாம் ஸ்ரீ லலிதா பரமேசுவரி என்ற அத்வைத ஞானத்தைப் பெற்றதுபோலவே, எல்லா உயிர்களும் பிரும்மவித்தையையும் சகல செல்வங்களையும் அழியாப் புகழையும் அத்வைதானுபவத்தையும் பெறுவதற்காகத் தினந்தோறும் எழுந்தவுடன் ஸ்ரீ லலிதா தேவியை எளிதில் வழிபடுவதற்கென்று இவ்வழகிய சுலோகங்கள் ஐந்தையும் திருவாய்மலர்ந்தருளினார்கள்.

வெல்க அக் கருணாமூர்த்திகளின் திருவடித் தாமரை!

ஸர்வதாரி புரட்டாசி பௌர்ணமி, ஸ்திரவாரம் } **வே. நாராயணன்.**

கோவிலூர் ஆதீனம்
கோவிலூர்-630 307



श्री ललितापरमेश्वरी

श्रीः

। श्री ललितापञ्चरत्नम् ।

ஸ்ரீ லலிதா பஞ்சரத்னம்

प्रातः स्मरामि ललितावदनारविन्दं
बिम्बाधरं पृथुलमौक्तिकशोभिनासम् ।
आकर्णदीर्घनयनं मणिकुण्डलाढ्यं
मन्दस्मितं मृगमदोज्ज्वलफालदेशम् ॥ १ ॥

ப்ராத: ஸ்மராமி லலிதாவதனாரவிந்தம்
பிம்பாதரம் ப்ருதுல மௌக்திக ஶோபிநாஸம் ।
ஆகர்ண தீர்க நயனம் மணி குண்டலாட்யம்
மந்தஸ்மிதம் ம்ருகமதோஜ்ஜ்வல பாலதேஶம் ॥ 1 ॥

லலிதாவதனாரவிந்தம் = லலிதா தேவியின் திரு முகமாகிய தாமரையை பிம்பாதரம் = கோவைப்பழம் போன்று சிவந்த உதடுகளையுடையதாயும் ப்ருதுல மௌக்திகஶோபி நாஸம் = பெருத்த முத்து மூக்குத்தியினாலே பிரகாசிக்கின்ற மூக்கோடு விளங்குவதாயும்

ஆகர்ணதீர்க நயனம் = காதுகளின் வரையிலே நீண்ட கண்களையுடையதாயும் மணி குண்டலாட்யம் = செம் மணிகள் குயிற்றிய குண்டலங்களை இரு கன்னப் புறத்திலுமுடையதாயும் மந்தஸ்மிதம் = (கன்னங்கள் இரண்டிலும் வெள்ளொளி வீசும்) புன்சிரிப்பை யுடையதாயும் ம்ருகமதோஜ்ஜ்வல பாலதேசம் = மான் மதம் என்னும் கஸ்தூரியாலே பொட்டிடப்பெற்று ஒளிருகின்ற நெற்றிப்புறத்தையுடையதாயும் ப்ராத: ஸ்மராமி = அதிகாலையில் (எழுந்திருந்ததும்) ஸ்மரணஞ் செய்கிறேன்.

நாம் ஒவ்வொருவரும் அதிகாலையில் எழுந்திருந் ததும், "இன்று நாம் செய்யவேண்டிய வேலை என்ன?" என்பதைப் பற்றிச் சிந்தனை செய்யவேண்டும். அப் படிச் செய்கின்றபோது, இவ்வாழ்க்கையிலும் மறு மையிலும் நாம் விரும்புவதையெல்லாம் பெறக்கூடிய வழியை நாடவேண்டும்; ஸம்ஸாரமாகிற ஸாகரத் தைக் கடந்து செல்லவேண்டும்; அதற்குரிய வித்தை யையும் இவ்வாழ்க்கையிலே இன்புறுவதற்கு வேண் டிய செல்வத்தையும் அழியாப் புகழையும் பெற வேண்டும். நம்முடைய நீசதையைக் கருதாது இவற் றையெல்லாம் அளிக்குந் தெய்வத்தைக் கண்ணாரக் கண்டு வாயாரத் துதித்து திருவடி தொழுதோமானல் மட்டுமே இவை கைகூடுவன. உலகங்கள் அனைத் தையும் ஈன்ற பரதேவதையே அத்தெய்வம். அவளே ஸரஸ்வதி வடிவினளாய் வித்தையையும் லக்ஷ்மி வடி வினளாய் செல்வத்தையும் ஈசுவரி வடிவினளாய் அழி

யாப் பேரின்பத்தையும் அளிக்கவல்லவள். ஆகையால், பிள்ளையுள்ளங் கொண்டு, அவளையே தினந்தோறும் உள்ளம், உரை, செயல் ஆகிய முக்கரணங்களாலும் வழிபட்டு வாழ்வதற்காக, ஜகத்குருவாக வந்த ஸ்ரீ சங்கர பகவத் பாதர்கள் ஸ்ரீ லலிதா தேவியைத் துதி செய்வதற்கமைந்த ஐம்பெருமணிகளானான சொன் மாலையொன்றைக் கோத்தருளியுள்ளார்கள். "பிள்ளையுள்ளம் பெறுவாயாக" என்றன்றோ வேதமாதாவும் அறிவுறுத்தி வாழ்த்துகிருள்.

தாய் முகமறியாப் பிள்ளை யுண்டோ? காலையிலே தூங்கியெழுந்ததும் சிறுபிள்ளை தாயாரின் முகத்தை மனத்தினுல் நினைக்கும். லலிதா தேவியாகிய லோக மாதாவின் மக்களாகிய நாம் அவளை எப்படி ஞாபகப் படுத்திக்கொள்கிறோம்? அப்பொழுது அலர்ந்த செந்தாமரையைப் போல விளங்குவதாகப் பெரியோர் நமக்குக் காட்டியவாறே அவளைச் சிந்தனை செய்கிறோம். ஆனல் வெறுஞ் செந்தாமரையன்று தேவியின் முகம்; தாமரையிலே கோவைக்கனி பழுத்திருக்குமா? மேலும், அதிலே கற்பகத்தின் கொழுந்தோடு நன்முத்து இணைந்திருக்குமா? அங்கே, கடலைப் போற் பரந்த கண்கள் காதுவரை நீண்டொளிர் வதைக் காண இயலுமா? மணி குண்டலங்கள் தாமரை மலரின் அருகே ஊசலாடுகின்றனவா? புன் முறுவல் என்னும் வெண் பூக்கள் தாமரையிற் பூப் பனவா? கண்ணாடிபோல் ஒளிரும் திருநெற்றிக்கும் அதன் இன்னொளியை எடுத்துக்காட்டுங் கஸ்தூரிப் பொட்டுக்கும் எங்கே போவது? இப்படியெல்லாம்

பக்தனுடைய குழந்தையுள்ளத்திலே சிந்தனை எழுகின்றது. தேவியின் திருமுகத்தைக் காணாதபோதும், பக்தனுடைய மனத்திலே பதிந்துள்ள பிரதிபிம்பமானது தேவியின் திருமுக மண்டலத்தை அகக்கண் முன் கொணர்ந்து நிறுத்திவிடுகின்றது. தாயின் முகத்தைக் கண்டதும், பிள்ளையின் மனம் “இதோ இம் முகத்திலே என்னை முத்தமிட்டுக் கொஞ்சுகின்ற கோவைச் செவ்வாயும், உச்சி மோக்கும்போது என் தலையிலே சூட்டிய முத்தோ என்னுமாறு திருமூக்கினின்று தொங்கும் முத்தும், எனை மழலைச் சொல்லைக் கேட்கின்ற காதுவரைக் களிகொண்டு துள்ளும் கண்களும், தலையை அசைத்து என்னைக் கடைக்கணிக்கும்போது ஊசலாடுகின்ற மகர குண்டலங்களும், பளிங்குபோன்று ஒளிரும் கன்னங்களிலே பூக்கின்ற புன்முறுவலும், என்னைக் குனிந்து நோக்கும் போது என்னைக் களிப்பூட்டும் திருநெற்றித் திலகமும் என் தாயின் திருமுகமே இது என்று விளக்குகின்றன” என்று அத் திருவுருவத்தை நோக்கி நோக்கி களிக்கின்றது.

प्रातर्भजामि ललिताभुजकल्पवल्लीं
रक्ताङ्गुलीयलसदङ्गुलिपल्लवाढ्याम् ।
माणिक्यहेमवलयाङ्गदशोभमानां
पुण्ड्रेक्षुचापकुसुमेषुसृणीर्दधानाम् ॥ २ ॥

ப்ராதர் பஜாமி லலிதா புஜகல்பவல்லீம்
ரக்தாங்குலீய லஸதங்குலி பல்லவாட்யாம் ।
மாணிக்ய ஹேம வலயாங்கத ஶோபமானும்
புண்ட்ரேக்ஷு சாப குஸுமேஷு ஸ்ருணீர்ததானும் ॥ 2 ॥

புண்ட்ரேக்ஷுசாப குஸுமேஷு ஸ்ருணீ: = வெள்ளை கரும்பாகிய வில், பஞ்சபாணங்களாய் அமைந்த பூக்கள், பாசக்கயிறு இவற்றை ததானும் = ஏந்தி நிற்பதாயும் மாணிக்ய ஹேம வலயாங்கத ஶோபமானும் = கருமாணிக்கக் கற்கள் பதித்த பொன்னுலான கை வளையல்களாலும், தோள் வளையல்களாலும் ஒளி பெற்று விளங்குவதாயும் ரக்தாங்குலீயலஸதங்குலி பல்லவாட்யாம் = செம்பொன் மோதிரங்கள் ஒளிர்கின்ற விரல்களாகிய செந்தளிர்களாற் செழுப்புற்றதாயுமுள்ள லலிதா புஜகல்பவல்லீம் = நான்கு கிளைகளையுடையதான லலிதா தேவியென்னும் கற்பகக் கொடியை ப்ராத: = அதிகாலையிலேயே பஜாமி = சென்றடைந்து சரண்புகுகிறேன்.

ஸ்ரீ மாதாவின் திருமுக மண்டலமோ அப்பொழுதலர்ந்த செந்தாமரையினை வெல்வது; அவளுடைய திருவுருவமோ தன்னை நாடியடைந்தவர்களுக்கு அவர்கள் வேண்டியவற்றை யெல்லாம் தருகின்ற கற்பகக் கொடியை ஒத்து விளங்குவது. இந்தக் கற்பகக்கொடிக்குச் சில சிறப்புகள் உண்டு. நாலாகப் பணைத்த தோள்களாகிய கிளைகள் உண்டு; அக்கிளைகளிலே அடுக்கடுக்காகக் கருமணியும் செம்பொன்னும் கலந்து அணி செய்யும் வளையங்கள் உண்டு;

அக்கிளைகளின் கடைப்பாகங்களிலே, அழகினுக்கு அழகு செய்கின்றவையான செம்பொன் மோதிரங்கள் பூண்ட தளிர்கள் உண்டு; அத்தளிர்கள் வெண் கரும்பை வில்லாகவும், ஐவகைப் பூக்களை பாணங்களாகவும் ஏந்தி, காண்போரின் உள்ளங்களை ஈர்த்து அடிமைகொள்ளும் பாசக்கயிற்றோடு விளங்குவன; இவ்வித சிறப்படையாளங்களையுடைய கற்பகக் கொடியே தன்னுடைய தாய் என்று உணர்ந்த பிள்ளை, அவ்வடையாளங்களைத் திருந்தக் கண்டு, "அம்மா!" என்று அவ்வுருவத்தை அணுகிச் சென்று அக் கொடியின் திருவடிப் புறத்தை அடைந்து இன்புறும்.

प्रातर्नमामि ललिताचरणारविन्दं
भक्तेष्टदाननिरतं भवसिंधुपोतम् ।
पद्मासनादिसुरनायकपूजनीयं
पद्माङ्कुशध्वजसुदर्शनलाञ्छनाढ्यम् ॥ ३ ॥

ப்ராதர் நமாமி லலிதா சரணாரவிந்தம்
பக்தேஷ்டதான நிரதம் பவஸிந்து போதம் ।
பத்மாஸனாதி ஸுர நாயக பூஜனீயம்
பத்மாங்குஶ த்வஜ ஸுதர்ஶன லாஞ்சனாட்யம் ॥ (3)

பக்தேஷ்டதான நிரதம் = பக்தர்களுக்கு விருப்பிய வற்றையெல்லாம் கொடுப்பதிலேயே எப்பொழுதும் இன்புறுவதும் பவஸிந்துபோதம் = ஸம்ஸாரமாகிற ஸாகரத்தைக் கடந்து அக்கரையேறுவதற்கு உதவு

4988
இ.கூ

கின்ற புணையாக அமைவதும் பத்மாஸனாதி ஸுரநாயக பூஜனீயம் = திருமாலின் உந்தித் தாமரையிலே தோன்றி அத்தாமரையிலேயே நித்திய வாஸஞ் செய்யும் பிரும்மதேவன் முதலான தெய்வத் தலைவர்களாலே பூஜித்து முக்தி பெறற்குரியதும் பத்மாங்குஶ த்வஜஸுதர்ஶனலாஞ்சனாட்யம் = தாமரை, துரட்டி, கொடி, ஸுதர்சன சக்கிரம் ஆகியவற்றை இரேகை வடிவிலே கொண்டு விளங்குவதுமான லலிதாசரணாரவிந்தம் = ஸ்ரீலலிதா தேவியின் திருவடித் தாமரையை ப்ராத: = அதிகாலையிலே நமாமி = வணங்குகிறேன்.

தேவியின் பாதங்கள் அடியார் வேண்டியவற்றையெல்லாம் அவர்களுக்கு அளித்து, அவர்கள் இன்புறுவதைக் கண்டு இன்புற்று, மீண்டும் பிறவாதபடி அவர்களுக்கு நற்கதியளிப்பதற்காக அவர்கள் கைகளால் விடாப்பிடியாகப் பற்றிக்கொண்டு ஸம்ஸார ஸாகரத்திலே நீந்திக் கரையேறுவதற்கு உதவும் புணைகளாயிருக்கின்றன. இதுபற்றியே பிரும்மதேவரும் மற்றும் தங்களைத் தேவர்களுக்குத் தலைவர்களாகப் பாவித்துக்கொண்டிருக்கும் பெருந்தேவர்கள் பலரும் தங்கள் அபிமானத்தை யொழித்துத் தங்கள் தலைகளைத் தேவியின் பாதபீடத்திலே சாய்த்து வழிபட்டுத் தங்கள் உயர் பதவிகளை ஸ்தாபித்துக் கொண்டு, இறுதியிலே மோக்ஷத்தைப் பெறுவோமென்ற உறுதியையும் பெறுகிறார்கள். பதுமரேகை, அங்குசரேகை, துவஜரேகை, ஸுதர்சன ரேகை ஆகிய உத்தம லக்ஷணங்கள் தேவியின் பாதங்களிலே

மிருந்திருப்பதால், அவளை வழிபடுவோர்களின் தலைகள் மீதும் அவை படிந்து, அவர்களுக்கு தேவியின் அனுக்கிரஹமுண்டானதற்கு அறிகுறிகளாய் விளங்குகின்றன. தேவியின் பக்தர்கள் இவ்வாறு இம்மையிலே வேண்டிய பேறுகளைப் பெற்று மறுமையிலும் மோக்ஷமடைவதற்கான லக்ஷணங்களோடு விளங்குவதைக் கண்டு, நானும் அந்த திவ்விய சரணாரவிந்தங்களிலே வணங்கித் தொழுதெழுகிறேன் என்கிறார்.

प्रातः स्तुवे परशिवां ललितां भवानीं
त्रय्यन्तवेद्यविभवां करुणानवद्याम् ।
विश्वस्य सृष्टिविलयस्थितिहेतुभूतां
विद्येश्वरीं निगमवाङ्मनसातिदूराम् ॥ ४ ॥

ப்ராத: ஸ்துவே பரஶிவாம் லலிதாம் பவானீம்
த்ரய்யந்த வேத்ய விபவாம் கருணானவத்யாம் ।
விஶ்வஸ்ய ஸ்ருஷ்டி விலய ஸ்திதி ஹேது பூதாம்
வித்யேஶ்வரீம் நிகம வாங் மனஸாதிதூராம் ॥ 4 ॥

நிகமவாங்மனஸாதிதூராம் = மனத்தாலே உணர்ந்து வாக்காலே துதித்துச் சென்று சேர்வதற்குப் புறப்பட்ட வேதங்கள், எவ்வளவு முயன்றும் மனத்திற்கும் வாக்கிற்கும் எட்டாத அதிதூரத்திலே தேவி இருப்பதைக் கண்டு, அவளை அறியலாகாது என்று மாத்திரம் அறிந்து தங்கள் முயற்சியினின்றும் மீளச் செய்தவளாதலின், வேதவாக்கிற்கும் வேதபுருஷனின் மன

திற்கும் எட்டாதவள் என்று பெயர் பெற்று விளங்குகின்றவளும் த்ரய்யந்தவேத்யவிபவாம் = ஆனாலும் அந்த மூன்று வேதங்களின் தலைசிறந்த பாகங்களான உபநிஷத்துக்களாலேயே ஒருவாறு விளங்கக் கூடிய பெருமைகளையுடையவளும் பவானீம் = என்றுமுள்ள பரம்பொருளாதலால் பவதேவர் என்று சொல்லப்படுகின்ற பரமேசுவரருடைய பத்தினியாய் விளங்குபவளும் விஸ்வஸ்ய ஸ்ருஷ்டிவிலயஸ்திதி ஹேதுபூதாம் = சரப்பொருள் அசரப்பொருள் ஆகிய இவ் வெல்லாப் பொருளையும் (அந்தப் பரம பொருளின் சன்னிதியிலே) சிருஷ்டித்தவளாகியும், மீண்டும் யுக முடிவிலே அவற்றை அப் பரம்பொருளிலே லயிக்கும்படி செய்யக் கூடியவளாயும், இடைக் காலத்திலே அவையெல்லாம் நிலைபெற்றிருப்பதற்குக் காரணமாயும் இருப்பவளும் கருணனவத்யாம் = பரம கருணைக்கு எல்லாவுயிர்களையும் பாத்திரமாக்கி, அவர்களுக்கெல்லாம் நிலைபெற்றிருக்குஞ் சக்தியையும், பரம்பொருளைப்போற்றி நற்கதி பெறுவதற்கான பக்தியையும், பரம்பொருளோடு ஒன்றிப் பேரின்பமெய்துவதற்கான மார்க்கங்களையும், ஞானத்தையும் அளித்துக் குற்றமொன்றுமில்லாதவளாக விளங்குபவளும் வித்யேஸ்வரீம் = பரப்பிரும்மத்தை அறிந்து அதோடு ஒன்றுவதற்கான வித்யைகள் பலவற்றை உபநிஷத்துக்களாலே அளித்து பிரும்மவித்யா ஸ்வரூபிணியாய் விளங்குபவளுமான பரஶிவாம் லலிதாம் = ஸர்வமங்களை என்று பெயர் பெற்று பரமசிவஸ்வரூபிணியாய் விளங்கும் லலிதாதேவியைப்ராத: = அதிகாலையில் எழுந்து ஸ்துவே = (சிந்தித்து வந்தித்து) சொற்களாலே போற்றுகிறேன்.

நம் அனைவரையும் படைத்த லலிதா தேவி நமக்கு முக்கரணங்களையும் அளித்ததின் நோக்கம் அவற்றைக் கொண்டு அவளை வழிபட்டு உய்யவேண்டும் என்பதே. அவளை வேத புருஷனுடைய வாக்கிற்கும் மனதிற்கும் எட்டாதவள் என்று அவளுடைய அருமைபெருமைகளை அவ்வேதவசனங்களைக் கொண்டே ஒருவாறாகத் தெரிந்துகொண்டு, அவ்வேத பாகங்களிலே விளக்கிய வித்யைகளை உபாஸித்து, அவளுடைய கருணைக்குப் பாத்திரர்களாகவேண்டும் என்று நமது மனம் முயலவேண்டும். கரசரணாதி கரணங்களும் அவளுடைய கோயிலுக்குச் சென்று அவளை வலம் வருவதிலும் எண்டிசையுமுள்ள பூக்களைக் கொணர்ந்து அவளை அர்ச்சிப்பதிலும் அவளுடைய பாதாரவிந்தங்களைப் புணையாக இறுகப் பிடித்து ஸம்ஸார ஸாகரத்திலே ஆழ்ந்து போகாமல் நீஞ்சிக் கரையேறுவதிலும் பயன்படவேண்டும். "வேதவசனங்களாலும் போற்றுதற்கரிய தேவியை நாம் என்ன சொல்லிப் போற்றுவோம்?" என்று மனமுடையாமல், அவளே பரமகருணாமூர்த்தி என்று அவ் வேதங்கள் அறுதியிடுவதைத் தஞ்சமாகக் கொண்டு, நம்முடைய வாய் எச்சில் வாயானாலும், அவளையே துதிக்கவேண்டும் என்று மேலுள்ள நான்கு சுலோகங்களால் அறிவுறுத்துகிறார்கள் பரமாசார்யர்களான ஸ்ரீ பகவத் பாதர்கள்.

प्रातर्वदामि ललिते तव पुण्यनाम
कामेश्वरीति कमलेति महेश्वरीति ।
श्रीशाम्भवीति जगतां जननी परेति
वाग्देवतेति वचसा त्रिपुरेश्वरीति ॥ ५ ॥

ப்ராதர் வதாமி லலிதே தவ புண்ய நாம
காமேஶ்வரீதி கமலேதி மஹேஶ்வரீதி ।
ஸ்ரீ ஶாம்பவீதி ஜகதாம் ஜனனீ பரேதி
வாக்தேவதேதி வசஸா த்ரிபுரேஶ்வரீதி ॥ 5 ॥

லலிதே = இவ்வாறு முக்கரணங்களாலும் உன்னை வழிபட்டதும் என்முன் உன் கருணாமூர்த்தத்தைக் காட்டியருளுகின்ற ஸ்ரீ லலிதா தேவியே! ப்ராத: = விடியற்காலத்திலே வசஸா = மொழிகளாலே (என் சொல்லால்) காமேஶ்வரீ இதி = எங்களுடைய நற்காமங்களை யெல்லாம் அளிப்பதற்கும் தீய காமங்களை யெல்லாம் மறுப்பதற்கும் எல்லாக் காமங்களுக்கும் ஈசுவரியாகவும் ஸரஸ்வதீ தேவிக்கும் லக்ஷ்மீ தேவிக்கும் ஈசுவரியாகவும் விளங்குபவளே என்றும் கமலா இதி = அந்த லக்ஷ்மீ தேவியாகவும் விளங்குபவளே என்றும் மஹேஶ்வரீ இதி = பரமேசுவரருக்குப் பத்தினியாக விளங்குபவளே என்றும் ஸ்ரீ ஶாம்பவீ இதி = ஸர்வ மங்களப் பொருளாக விளங்குபவளே என்றும் ஜகதாம் ஜனனீ பரா இதி = லோக மாதா என்று பெயர்பெற்ற ஸ்ரீ தேவியாக விளங்கும் பரம் பொருளே என்றும் வாக்தேவதா இதி = (எல்லாப் பொருளையும் படைத்தது போலவே எல்லா மொழி

களையும் படைத்த) ஸாஸ்வதி தேவியாக விளங்கு பவளே என்றும் த்ரிபுரேச்வரீ இதி = முப்புரங்களை எரித்த முக்கண்ணருக்குரிய தேவியே என்றும் தவ = உம்முடைய புண்யநாம = (என்னுடைய எச்சில் வாய்க்கும்) தூய்மையளிக்கின்ற பெயரையே வதாமி சொல்லிக் கொண்டிருக்கிறேன்.

"உம்மை துதிப்பேன்" என்ற பொழுதே பரம கருணாமூர்த்தியும் பரதேவதையுமான நீங்கள் எனக்குத் தரிசனஞ் கொடுத்ததை நினைத்து, உங்களுடைய ஆயிரம் பெயர்களாலும் உங்களுடைய பெருமைகளை உணர்ந்து, அவற்றை உச்சரிப்பதாலேயே உண்டாகும் இனிமையை நிரந்தரமாகப் பெறக் கருதி, லலிதா பராதேவதையாகி என்னைக் காத்தருளுகின்ற தெய்வமே ஸ்ரீவித்யையிலே சிறப்பிக்கப் பெற்ற பரதேவதை யென்றும், காமேசுவரி என்றும், அவளே பரமேசுவரரின் இராணி என்றும், அவளே ஸகல மங்களங்களையும் தருகின்ற கருணாமூர்த்தி யென்றும், அவளே எல்லாப் பொருளையும் எல்லாச் சொற்களையும் படைத்து நாம ரூபங்களை யுடையனவாகப் பெற்றெடுத்த ஸ்ரீதேவியும் ஸரஸ்வதி தேவியுமாய் விளங்குகின்றாள் என்றும், இவ்விரு மூர்த்திகளாய் படைத்துப் பாதுகாக்கின்றவளே திரிபுராந்தகரான அழித்தற்கடவுளுக்குரிய சக்தி என்றும், குணசம்பந்த முள்ளவையும் முனிவர்களாலே பாடப்பெற்றவையுமான தங்களுடைய திவ்விய நாம ஸஹஸ்ரங்களை நான் பெற்ற பரமானந்தத்திற்குப் போக்குவீடாகச் சொல்லிக் கொண்டே யிருப்பேன்.

இவ்வாறு ஐம்பெரு மணிகள் கோத்த மாலை போன்று விளங்கும் சுலோகங்களாலே ஸ்ரீ லலிதா தேவியை வழிபட்டு, பரமாசாரியராகிய ஸ்ரீ பகவத் பாதர்கள் இவ்வாறு ஆசரித்து உய்வீர்களாக என்று நம் எல்லோருக்கும் உபதேசிக்கிறார்.

यः श्लोकपञ्चकमिदं ललिताम्बिकायाः
सौभाग्यदं सुललितं पठति प्रभाते ।
तस्मै ददाति ललिता झटिति प्रसन्ना
विद्यां श्रियं विमलसौख्यमनन्तकीर्तिम् ॥ ६ ॥

ய: ஶ்லோக பஞ்சகமிதம் லலிதாம்பிகாயா:
ஸௌபாக்யதம் ஸுலலிதம் படதி ப்ரபாதே ।
தஸ்மை ததாதி லலிதா ஜடிதி ப்ரஸன்னா
வித்யாம் ஶ்ரியம் விமலஸௌக்ய மனந்தகீர் (த்) திம் ॥ 6 ॥

ய: = எவனொருவன் ஸௌபாக்யதம் = ஸகல ஸௌபாக்கியங்களையும் அளிப்பதும் ஸுலலிதம் = மிகவும் அழகிய இளஞ் சொற்களைக்கொண்டு அழகு பெற்றுள்ளதுமான லலிதாம்பிகாயா: = லலிதாதேவி யாகிய ஸ்ரீ மாதாவின் இதம் = இந்த ஶ்லோக பஞ்சகம் = ஐந்து சுலோகங்களின் கோவையை ப்ரபாதே = விடியற் காலத்திலே படதி = (இசையோடு முழுமனஞ் செலுத்திப் பொருளுணர்ந்து பாட இயலாவிடினும்)

வெறும் வாய்ச்சொல்லாகச் சொல்கிருனே தஸ்மை = அவனுக்கும் லலிதா = ஸ்ரீ லலிதா தேவியானவள் ஜடிதி ப்ரஸன்னா = உடனே புன்முறுவலோடு காட்சியளிப்பவளாய் வித்யாம = நல்லறிவையும் ச்ரியம் (அந் நல்லறிவைக் கொண்டு நல்வழிகளிலே பயன் படுத்துவதற்கான) செல்வத்தையும் விமலஸௌக்யம் = (அறிவையும் செல்வத்தையும் நல்வழியிலே உபயோகிப்பதாலே கிடைப்பதாய்) துன்பம் ஒரு சிறிதும் கலவாத இன்பத்தையும் அனந்தகீர்(த்)திம் = உலகமுள்ள மட்டும் அழியாது நிலைபெறுவதான நீண்ட புகழையும் ததாதி = தருகிருள்.

மானிடப்பிறவி எடுத்த நமக்கு என்ன வேண்டும்? நல்லறிவும் உலக நன்மைக்குப் பயன் படுத்துவதற்கு வேண்டிய செல்வங்களும் வேண்டும். இவ்வாறு பரோபகார வாழ்க்கை வாழ்வதாலே வருகின்றதான துன்பங் கலவாத இன்பத்தை நுகரவேண்டும்; இன்னுன் தேவீபக்தனுகி நல்லறிவையும் சகல செல்வங்களையும் தனிப்பட்ட இன்பத்தையும் இம்மையிலேயே பெற்று மோக்ஷ நிலைமையும் பெற்ருன் என்னும் புகழ் உலகுள்ளவரையும் நிலைபெற்று நின்று மற்றவர்களையும் தேவியின் சரணுரவிந்தங்களை நாடச் செய்ய வேண்டும். இவ்வளவு தேவைகளையும் நமக்குத் தந்தருளுவதற்காக நாம் ஒவ்வொரு நாளும் அதி காலையிலெழுந்து எளிதில் தேவியைத் துதிப்பதற்கென்று ஐந்து அழகிய சுலோகங்களைப் பாடியருளினுர்கள் நமது பரமாசாரியர்களாகிய ஸ்ரீ பகவத் பாதர்கள்.

ஆகையால் அவர்கள் அருளிய இந்தப் பஞ்சரத்னங்களையும் திரிகரணங்களிலும் பதிய வைத்துக்கொண்டு, நாம் செய்கின்ற காரியங்களை யெல்லாம் அவர்களுக்கே அர்ப்பணமாக்கி, அவர்களுடைய உபதேசப்படி தேவியைத் தினந்தோறும் துதித்து அவர்களுடைய மனது களிப்புறும்படி செய்வோமாக. அவர்கள் நமக்குச் செய்த உதவியின் பயனாக நாம் அடியிற் கண்ட சுலோகத்தையும் பிரதிதினமும் அதிகாலையிலே சொல்லித் துதிப்போமாக.

गुरुस्त्वं शिवस्त्वं च शक्तिस्त्वमेव
त्वमेवासि माता पिता च त्वमेव ।
त्वमेवासि विद्या त्वमेवासि बन्धु-
र्गतिर्मे मतिर्देवि सर्वं त्वमेव ॥

—भवानीभुजंगे

குருஸ்த்வம் ஶிவஸ்த்வம் ச ஶக்திஸ்த்வமேவ
த்வமேவாஸி மாதா பிதா ச த்வமேவ ।
த்வமேவாஸி வித்யா த்வமேவாஸி பந்துர்-
கதிர்மே மதிர்தேவி ஸர்வம் த்வமேவ ॥

—பவானீ புஜங்கத்திலிருந்து

தேவி = தேவியே! த்வம் = நீயே குரு: = குருவும்; ஶிவ: த்வம் நீயே பரமசிவனும்; ஶக்தி: த்வம் ஏவ = நீயே சிவ சக்தியும் த்வம் ஏவ மாதா அஸி =

நீயே தாயாகின்ருய் பிதா ச த்வம் ஏவ = தந்தையும் நீயே த்வம் ஏவ = நீயே வித்யா அஸி = (தத்துவத்தை அறிவிக்கும்) ஸ்ரீ வித்யையாகின்ருய்; த்வம் ஏவ நீயே பந்து: அஸி; நற் சுற்றமும் ஆகின்ருய்; மே = எனக்கு கதி: = நற்கதியாகின்ருய் ஸர்வம் த்வம் ஏவ = நீயே எல்லாமுமாகின்ருய் (என்பது) மே மதி: = என்னுடைய கருத்து.

ஸ்ரீ லலிதாதேவி திருவடிகளே துணை.

கோவிலூர் ஆதீனம்
ஓம் தத்ஸத்ம்
கோவிலூர்-630 307